ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே
பகைவீழக்கடலோடிகளே தேசம்மீழக்கடலோடிகளே

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே

கடற்கரு வேங்கைகள் லெப்ரினல் கேணல் பேத்தா
இலக்கியன் குமரவேல் வல்லவன் வித்தாய் *2*
இடர்கடல் படையினை ஆழ்கடல் வீழ்த்தி *2*
வெடித்தனர் என ஏந்தினோம் தலை தாழ்த்தி

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே

அலைபாடும் கடல் மடியில் நாளும் நடமாட்டம்
ஆழகடலோடிகளாய் அலைகளில் தேரோட்டம்
மலைகளையும் புரட்டும் பலம் வாய்த்திட நம் புலிகள் *2*
வைத்ததடா உங்கள் மனம் தழைத்த வலிமை

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே

நீல கடல் பரப்பில் உங்கள் ஆட்சி நித்தம் நித்தம்
நிகழ்த்தியது பகைவனுக்கு நிலத்திலும் ஏ வீழ்ச்சி *2*
ஆழகடலோடிகளே அன்னை மண்ணை சூளும் *2*
ஆன்னியரின் அடாவடிகள் வேங்கை கையால் வீழும்

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே

தடம் சுமக்கா நீரினிலும் தடம் பதித்தே போனிர்
சரித்திரத்தின் ஏட்டினிலும் தடம் பதித்தே போனிர் *2*
கடற்புலிகள் பலம் சிறக்க வழி காட்டி நின்றீரே *2*
கரு நீல கடல் சிவக்க தீப் பிழம்பாய் சென்றீரே

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே
பகைவீழக்கடலோடிகளே தேசம்மீழக்கடலோடிகளே

ஆழகடலோடிகளே தமிழீழக்கடலோடிகளே